The workmen of the above concern Shri Ittirah Mathew, Mappani House, Inchathotti, Kothamangalam and Smt. Rosamma Mathew, Mappani House, Inchathotti, Kothamangalam.

Representations:—

M/s Joseph & Markose,
Advocates, Kottayam. .. For *Management.*

Shri T. M. Mohammed Youseff,
Advocate, Cochin-11 .. For *Workmen*.

ORDER

Dismissal of two employees is what is involved in this reference. The employees are husband and wife. They were working in the rubber estate belonging to the Management. While so disciplinary proceedings were initiated against them attributing theft of five kilograms of scrap rubber. A domestic enquiry was also held. The Enquiry Officer found the workmen guilty. This finding was accepted and the workmen were dismissed. The correctness of that dismissal is being challenged by the workmen. It is admitted that there was a dismissal. So we have to proceed on the basis that there was a dismissal even though the issue referred is denial of employment to these two workmen.

2. The Management is defending its action by repeating the allegation that the workmen were really guilty of the misconduct of theft. Reliance is placed on the domestic enquiry conducted by the witness examined as MW1 before me. According to the Management Ext. M1 (a) finding rendered by MW1 is correct and proper on the basis of the evidence contained in Ext. M1 file. That evidence was adduced in a proper domestic enquiry. The workmen were given all opportunities to participate in the domestic enquiry and to defend themselves. The punishment is also proportionate to the gravity of the offence proved. So the workmen are not entitled to any reliefs.

3. The workmen in their claim statement while pleading innocence of the charges state that they were not given sufficient opportunity to defend themselves at the enquiry. The enquiry was conducted by a paid employee of the Management. He was heavily biased in favour of the Management. The enquiry was a mere farce. Therefore the enquiry and the findings are to be discarded. The workmen claim reinstatement with all benefits.

4. In the nature of the rival contentions it became necessary to consider the validity of the domestic enquiry as a preliminary issue. The evidence is limited to the testimony of the Enquiry Officer and Exts. M1 and M1 (a).

5. The point arising for consideration at this stage is as to whether there was a proper and valid domestic enquiry.

6. The exact date of the theft is not mentioned anywhere in the charge. The allegation is that five kilograms of scrap rubber was stolen from the Management's estate where these workmen are working and the same was sold at Moovattupuzha by the female worker on 21-2-1979. Disciplinary proceedings were initiated on 28-2-1979. The enquiry was posted for the first time on 15-3-1979. Notice regarding this enquiry was admittedly served on the workmen only on 12-3-1979. The workmen applied for time for two weeks. The Enquiry Officer was satisfied of the genuineness of the reasons stated for the adjournment. But he granted time only upto 22-3-1979. On 22-3-1979 the workmen again applied for time and requested for permission to have the assistance of a co-worker at the enquiry. Here again the Enquiry Officer was convinced of the request.

He permitted the workmen to have the assistance of a co-worker. But he posted the case for enquiry to the next day, i. e., 23-3-1979. On the 23rd Shri Ittirah Mathew, the male workman, could not appear. His wife appeared before the Enquiry Officer and submitted that her husband is unwell and therefore cannot participate. She also said that there was no sufficient time to obtain the services of a fellow worker to assist them at the enquiry. Yet the Enquiry Officer started the enquiry. Some witnesses were examined to whom Smt. Rosamma, the female worker who attended, put some questions. The enquiry was adjourned again to the next day. On that day the enquiry was completed. There was no defence evidence. On the available evidence the finding was rendered.

7. The workmen have a definite case that they are illiterate and therefore they could not effectively defend themselves. The Enquiry Officer as MW1 pleads ignorance of the educational qualifications and the capacity of the workmen to have a proper defence in an enquiry like this. This is not a case where the workmen adopted any sort of delaying tactics. They were ready to participate in the enquiry. The Enquiry Officer is seen to have granted them only one day to arrange for the assistance of a co-worker. Some witnesses were examined in the absence of one of the workmen. It is evident in the circumstances that there was unnecessary haste on the part of the Enquiry Officer. The workmen should have been given some breathing time to make arrangements for their defence. The failure has substantially affected the interests of the workmen adversely. It cannot therefore be said that the principles of natural justice have been adhered to. I have no hesitation to say that there is no proper and valid enquiry. The findings arrived at in such circumstances are necessarily to be vacated.

8. The Management in its written statement has claimed a right to adduce evidence in case it is found that the enquiry is not proper. It needs hardly be mentioned that the Management will certainly be at liberty to adduce evidence afresh on the charges before this court. In the result it is found that there was no proper and valid domestic enquiry.

Dictated to the Confidential Assistant, transcribed and typed out by him, corrected by me and declared in open Court on this the 10th day of August, 1981.

N. SUKUMARAN,
Presiding Officer.

Appendix

Witnesses examined on the Management's side ;

MW1. Shri P. Karunakaran Nair.
MW2. „ P. P. Jose.
MW3. „ M. M. Sadasivan

G.A. 129/N.

MW4. Shri M. G. Joseph
MW5. ,, P. N. Kunjukochan.
MW6. ,, C. C. Elias.
MW7. ,, Jose.
MW8. ,, Satyavan.
MW9. ,, Hassan.
MW10. ,, K. M. Aliyar.
MW11. ,, Johny.
MW12. ,, K. M. Joseph.
MW13 ,, O. M. Razhac.
MW14. ,, Joseph Kurian.

Witnesses examined on the Workmen's side:

WW1. Shri Ittirah Mathew.
WW2. Smt. Rosamma.

Exhibits marked on the Management's side :

Ext. M1. The file relating to the domestic enquiry.
,, M1 (a) Enquiry report dated 3-4-1979.
,, M2. A report of Sri M. G. Joseph dated 9-1-1979 submitted to the Superintendent of the estate.
,, M3. A communication dated 10-1-1979 from the Superintendent to Sri M. G. Joseph.
,, M4. A report dated 28-2-1979 submitted to the Superintendent by M/s M. ... Joseph and K. M. Thomas.
,, M5. A statement of Sri T. E Hassan dated 22-2-1979.
,, M6. A statement of Sri Cheria Paulose dated 22-2-1979.
,, M7. A statement of Sri K. M. Joseph dated 21-2-1979.

GOVERNMENT OF KERALA

Health (D) Department

NOTIFICATION

No. 19568/D2/82/HD. *Dated, Trivandrum, 13th May* 1982

The following Notification No. G.S.R. 62 (E) dated the 15th February, 1982 of the Government of India, Ministry of Health and Family Welfare (Department of Health) published in the Gazette of India, Extraordinary, Part II– Section 3– subsection (i) dated the 15th February, 1982 is hereby republished for general information.

By order of the Governor,
M. S. K. RAMASWAMI,
Special Secretary to Government

GOVERNMENT OF INDIA

Ministry of Health and Family Welfare

(Department of Health)

NOTIFICATION

New Delhi, the 15th February 1982.

G. S. R. 62 (E).—Whereas a draft of certain rules further to amend the Drugs and Cosmetics Rules, 1945 was published as required by section 12 and 33 of the Drugs and Cosmetics Act, 1940 (23 of 1940), under the notification of the Government of India in the Ministry of Health and Family Welfare (Department of Health) No. G S.R. 483 (E), dated the 19th August, 1981, at pages 1477 and 1478 of the Gazette of India, Extraordinary, Part II—Section 3, subsection (i), dated the 19th August, 1981, inviting objections and suggestions from all persons likely to be affected thereby before the expiry of ninety days from the date of publication of the draft notification in the Official Gazette ;

And whereas the said Gazette was made available to the public on the 2nd September, 1981.

And whereas no objections or suggestions has been received from the public on the said draft rules ;

Now, therefore, in exercise of the powers conferred by sections 12 and 33 of the Drugs and Cosmetics Act, 1940 (23 of 1940), the Central Government, after consultation with the Drugs Technical Advisory Board, hereby makes the following rules further to amend the Drugs and Cosmetics Rules, 1945, namely:—

Rules

1. These rules may be called the Drugs and Cosmetics (Ist Amendment) Rules, 1982.

2. In the Drugs and Cosmetics Rules, 1945, in rule 3 A,—

(i) In sub-rule (1), after item (8), the following proviso shall be inserted, namely:—

"Provided that the functions of the Director in respect of Oral Polio Vaccine shall be exercised by the Deputy Director and Head of the Polio Vaccine Testing Laboratory of the said institute" ;

(ii) Sub-rule (4) shall be omitted ;

(iii) Sub-rule (5) shall be re-numbered as sub-rule (4).

(F. No. X. 11013/2/81-DMS & PFA)

R. K. SINGHAL,

Joint Secretary.

Kerala Gazette No. 34 dated 24th August 1982
PART I

Section iii

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-பி) துறை.

அறிவிக்கை

எண். 19021/சட்டமியற்றல் பி 1/80/சட்டம்

திருவனந்தபுரம், 1981 ஜனுவரி 20 / 1902 பௌஷ 30

கேரள சட்டமன்றத்தின் பின்வரும் சட்டம் பொதுத் தகவலுக்கென இதனால் பிரசுரிக்கப்படுகிறது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதா விற்கு 1981 ஜனுவரி 17-வது நாள் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
தனிச் செயலாளர்.
(சட்டம்)

The Kerala Marine Fishing Regulation Act, 1980

1981-ன் 10-வது சட்டம்

1980-ன் கேரள கடல் மீன்பிடித்தல் ஒழுங்குசெய்தல் சட்டம்

மாநிலத்தின் கடலோரப் பகுதியில் கடலில் மீன்பிடிக் கலங்களை ஒழுங்கு செய்ய வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

தோற்றுவாய்.—மாநிலத்தின் கடலோரப் பகுதியில் கடலில் மீன்பிடிக் கலங்களை ஒழுங்கு செய்ய வகை செய்வதற்கு தேவையாக இருப்பதால்;

இது இந்தியக் குடியரசின் முப்பத்தொன்றாவது வருடத்தில் பின்வருமாறு சட்டமாக்கப்படட்டும் :—

அத்தியாயம் I

முன்னுரை

1. சுருக்கத்தலைப்பு, வியாபகம் மற்றும் தொடக்கம்.—(1) இந்த சட்டம் 1980-ன் கேரள கடல் மீன்பிடித்தல் ஒழுங்கு செய்தல் சட்டம் என்று அழைக்கப் படலாம்.

(2) இது கேரள மாநிலம் முழுவதும் வியாபிக்கிறது.

(3) இது 1980 நவம்பர் 24-ம் நாள் அமலுக்கு வந்திருப்பதாகக் கருதப் படும்.

2. விளக்கவுரைகள்.—இந்த சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படாலன்றி,—

G. 747/V.

(எ) "தீர்ப்பு செய்யும் அதிகாரி" எனில் கெசற்று விளம்பரம் மூலம் விளம்பரத்தில் குறிப்பிடப் படக்கூடிய அத்தகைய பகுதிகளுக்கு இந்த சட்டத்தினுல் தீர்ப்பளிக்கும் அதிகாரிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பிரயோகிக்கவும் அவரது கடமைகளைப் புரியவும் அரசினுல் அதிகாரப்படுத்தப்பட்ட மீன்பண்ணைத் துறை உதவி டைரக்டர் பதவிக்குக் குறையாத மீன் பண்ணைத்துறையின் ஏதேனும் அலுவலர் என்று பொருட்படும்;

(பி) "மேல்முறையீட்டு காரியம்" எனில் பிரிவு 18-ன் கீழ் அமைக்கப்பட்ட மேல்முறையீடு வாரியம் என்று பொருட்படும்;

(சி) "அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர்" எனில் சொல் வருகின்ற இந்த சட்டத்தின் ஏற்பாட்டில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காரியம் சம்பந்தமாக, கெசற்று விளம்பரம் வாயிலாக அரசு அதிகாரப்படுத்துகின்ற அத்தகைய அலுவலர் என்று பொருட்படும்,

(டி) "மீன்பிடிக்கலம்" எனில் பலன் பெறுவதற்காகக் கடல் மீன் பிடிப்பில் ஏற்பட்டுள்ள, உந்துவதற்கு இயந்திர அமைப்புகள் பொருந்தப்பட்டிருப்பினும் அல்லாவிடினும், ஒரு கப்பல், அல்லது படகு எனப் பொருட்படுவது டன் அதனில் கடல் மீன்பிடிக்க பயன்படுத்தப்படும்,

(i) ஒரு கட்டுமரம்,

(ii) ஒரு தோணி, மற்றும்

(iii) வள்ளம் இவை உட்படும்.

(இ) "துறைமுகம்" எனில் இந்த அவசரச் சட்டத்தின் நோக்கங்களுக்காக கெசற்று அறிவிக்கை வாயிலாக அரசினுல் காலாகாலங்களில் நிர்ணயிக்கப்படும் எல்லைக்குள் உள்ள இடம் என்று பொருட்படும்,

(எப்) "குறிப்பிடப்பட்ட" எனில் இந்த சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளால் குறிப்பிடப்பட்டது என்று பொருட்படும்,

(ஜி) பதிவு செய்யப்பட்ட "மீன்பிடிக்கலம்" எனில்,—

(i) 1972-ன் கடல்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரக்குழு சட்டத்தின் (1972-ன் மத்தியச் சட்டம் 13) பிரிவு 11-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மீன்பிடிக்கலம், அல்லது

(ii) பிரிவு 9-ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு மீன்பிடிக்கலம் என்று பொருட்படும்.

(எச்) "குறிப்பிடப்பட்டபகுதி" எனில் கெசற்று விளம்பரம் வாயிலாக அரசினுல் குறிப்பிடப்படுகின்ற மாநிலத்தின் கடலோரப்பகுதி முழுவதுமாக உள்ள ஆனுல் நாடு சேர்ந்த கடல் பகுதிகளின் அப்பால் அல்லாத கடல்பகுதி என்று பொருட்படும்.

(ஐ) "மாநிலம்" எனில் கேரள மாநிலம் எனப்பொருட்படுவதுடன் அந்த மாநிலத்தின் கடலோரப்பகுதி முழுவதும் உள்ள நாடு சேர்ந்த கடல்பகுதியும் உட்படும்.

3. <u>இந்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காக அலுவலர்களை அதிகாரப்படுத்தல்.</u>—கெசற்று விளம்பரம் வாயிலாக அரசு—

(எ) ஒரு கெசற்று பதிவுபெற்ற அதிகாரியின் தரத்தில் குறைந்த ஒரு அலுவலர் அல்லாத ஏதேனும் அரசு அலுவலர், அல்லது

(பி) ஒரு கெசற்று பதிவு பெற்ற அலுவலர் தரத்திற்குறைந்த ஒரு அலுவலர் அல்லாத மத்திய அரசின் ஏதேனும் அலுவலர் அல்லது மத்திய அரசின் பாதுகாப்புப்படையின் ஒரு கமிஷன்டு அலுவலர், அந்த அரசின் அனுமதியுடன்,—

அறிவிக்கையில் குறிப்பிடப்படும் பகுதியில் இந்த சட்டத்தின் கீழ் ஒரு அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் கடமைகளை புரியவும் அதிகாரப்படுத்தலாம்.

அத்தியாயம் II

மீன்பிடித்தலை ஒழுங்குசெய்தல்

4. குறிப்பிடப்பட்ட பகுதிக்குள் சில காரியங்களை ஒழுங்கு செய்ய, கட்டுப் படுத்த அல்லது தடை செய்ய அதிகாரம்.—(1) துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப் பட்ட காரியங்களைக் கருததிறகொண்டு செற்றில் அறிவிக்கப்பட்ட ஆணை வாயிலாக அரசு,—

(எ) குறிப்பிடப்படக்கூடிய பிரிவு அல்லது பிரிவுகளிலான மீன்பிடிக் கலங்கள் மூலம் ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதியில் மீன்பிடித்தலை, அல்லது

(பி) ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதியில் மீன்பிடிக்கப் பயன் படுத்தப்படும் மீன்பிடிக்கலங்களின் எண்ணிக்கையினை அல்லது

(சி) அறிவிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய மீன் இனங் களையும் அத்தகைய கால அளவிலும் ஏதேனும் குறிப்பிடப்படக்கூடிய பகுதியில் மீன் பிடித்தலை, அல்லது

(டி) குறிப்பிடப்பட்டவாறு, ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதியில் அத்தகைய மீன்பிடிக்கருவியினை பயன்படுத்தல்,—

ஒழுங்கு செய்யவோ, கட்டுப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒரு ஆணை உண்டுபண்ணுகையில் பின் வரும் காரியங்களை அரசு கருத்தில் கொள்ளவேண்டும், அவையாவன:—

(எ) மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவு நபர்களின், குறிப் பாக கட்டுமரம், தோணி, வள்ளம் போன்ற பரம்பரையான மீன்பிடிக்கலங்களைப் பயன்படுத்தி மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனைப் பாதுகாக்கும் தேவை,

(பி) மீன்களைப் பாதுகாத்து விஞ்ஞான அடிப்படையில்மீன்பிடித்தலை ஒழுங்கு செய்தலுக்குரிய தேவை,

(சி) கடலில் சட்ட ஒழுங்கினைப் பேணும் தேவை,

(டி) குறிப்பிடப்படும் ஏனைய பிறகாரியம்

5. பிரிவு 4-ன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணையினை மீறி மீன் பிடிக்கலங்களை பயன்படுத்துவதைத் தடை செய்தல்.—பிரிவு 4-ன் கீழ் உண்டு பண்ணப்பட்ட ஒரு ஆணையினை மீறும் ஏதேனும் விதத்தில் மீன்பிடித்தலுக்காக அத்தகைய மீன்பிடிக்கலத்தினை அதன் சொந்தக்காரரோ தலைவனோ பயன் படுத்தவோ பயன்படுத்தச் செய்யவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது:

எனினும் பிற பகுதியில் மீன்பிடிக்கும் நோக்கத்திற்காக அல்லது ஏனைய பிற நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட ஒரு பகுதி தவிர ஏதேனும் பகுதியிலி ருந்து அல்லது பகுதிக்கு ஏதேனும் குறிப்பிடப்பட்டபகுதி வழியாக கடற் கரைக்கு அல்லது கடற்கரையிலிருந்து ஏதேனும் மீன்பிடிக்கலத்தின் போக்கு வரத்தினை தடை செய்வதாக அத்தகைய ஆணையில் எதுவும் தடை செய்வ தாக பொருள்கொள்ளக் கூடாது:

எனினும் மேலும் ஏதேனும் குறிப்பிடப்பட்டபகுதி வழியாக அத்தகைய மீன்பிடிக்கலம் செல்வது மூலம், கட்டுமரம், தோணி அல்லது வள்ளம் போன்ற பரம்பரையான ஏதேனும் மீன்பிடிக்கலம் பயன்படுத்தி குறிப்பிடப்பட்ட பகுதியில் மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் நபருக்குரிய ஏதேனும் மீன் பிடி வலை அல்லது கப்பிகளுக்கு எந்தவிதத்திலும் சேதம் விளைவிக்கக்கூடாது.

6. மீன்பிடிக்கலங்களுக்கு உரிமம் அளித்தல்.—(1) மீன்பிடிக்கலத்தின் உரிமையாளர், ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதியில் மீன்பிடிக்க மீன்பிடிக் கலத்தினை பயன்படுத்த உரிமத்திற்காக அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலருக்கு ஒரு விண்ணப்பம் நல்கலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒவ்வொரு விண்ணப்பமும், குறிப்பிடப்பட்ட நமூனாவில், அத்தகைய விபரங்கள் அடங்கியதாகவும் அத்தகைய கட்டணத்துடனும் இருக்கவேண்டும்.

(3) அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி, அவர் தகுந்ததெனக் கருதும் விசாரணை நடத்திய பின்னர் மற்றும் துணைப்பிரிவு (4)-ல் குறிப்பிடப்பட்ட காரியங்களைக் கருத்திற்கொண்டு மீன்பிடிக்கலத்தின் உடமையாளருக்கு குறிப்பிடப்பட்ட பகுதியில் அல்லது உரிமத்தில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மீன்பிடிக்க அத்தகைய கலத்தினைப் பயன்படுத்த ஒரு உரிமம் வழங்கவோ அல்லது வழங்குவதனை மறுக்கவோ செய்யலாம்.

(4) துணைப்பிரிவு (3)-ன் கீழ் உரிமம் வழங்குகையில் அல்லது மறுக்கையில் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி பின்வரும் காரியங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும், அவையாவன :—

(எ) மீன்பிடிக்கலம் ஒரு பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக்கலம் தானா,

(பி) மீன்பிடிக்கலத்தில் பொருத்தப்பட்ட பாகங்களும் மீன்பிடிக்க கருவியும் உட்பட மீன்பிடிக்கலத்தின் நிலைமை.

(சி) பிரிவு 4-ன் கீழ் உண்டுபண்ணக்கூடிய ஏதேனும் ஆணை,

(டி) குறிப்பிடப்படக்கூடிய ஏனைய பிற காரியம்

(5) இந்தப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒரு உரிமம், அத்தகைய கட்டணம் நல்குவதற்குரிய நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளை முறையே நிறைவேற்றுவதற்குரிய பிணையம் வைத்தல் உட்பட குறிப்பிடப்பட்ட நமூனாவிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டும்:

எனினும் பல்வேறு வித மீன்பிடிக்கலங்களுக்கான உரிமங்கள் சம்பந்தமாக பல்வேறு கட்டணங்கள் மற்றும் பிணையமாக பல்வேறு தொகைகள் குறிப்பிடப்படலாம்.

(6) இந்தப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒரு உரிமம், அதனில் குறிப்பிடப்பட்ட கால அளவிற்கு செல்லுபடியாகும் அல்லது ஏதேனும் காரியத்தில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் அனுமதிக்கத்தகுந்ததெனக் கருதும் அத்தகைய நீட்டப்பட்ட கால அளவிற்கு செல்லுபடியாகும்.

7. உரிமம் பெறாத மீன்பிடிக்கலங்கள் பயன்படுத்தி மீன்பிடிப்பதனை தடை செய்தல்.—இந்த அவசரச் சட்டத்தின் தொடக்கத்திற்குப்பின்னர் பிரிவு 6-ன் கீழ் உரிமம் பெறாத ஒரு மீன்பிடிக்கலம் பயன்படுத்தி ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதியில் ஒருவரும் மீன்பிடிக்கக்கூடாது:

எனினும் இந்த சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த ஏதேனும் மீன்பிடிக்கலத்திற்கு கெசற்று விளம்பரம் மூலம் அரசினால் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு இந்த பிரிவில் ஒன்றும் பொருந்தாது.

8. உரிமங்களை ரத்து செய்தல் நிறுத்திவைத்தல் மற்றும் திருத்துதல்.—(1) இதன் சார்பில், அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரிக்கு, நல்கப்பட்ட குறிப்பீட்டினால் அல்லது வேறு வகையில் அவர்—

(எ) பிரிவு 6-ன் கீழ் வழங்கப்பட்ட ஒரு உரிமம், ஒரு முக்கிய காரியத்தினைத் தவறாகக் கூறி பெறப்பட்டது என்று, அல்லது

(பி) உரிமம் பெற்றுள்ளவர் நியாயமான காரணமின்றி எந்த நிபந்தனைகளுக்குப்பட்டு உரிமம் வழங்கப்பட்டதோ அவைகளை அனுசரிக்கத் தவறிவிட்டார் அல்லது இந்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் உண்டு பண்ணபட்ட ஏதேனும் ஆணையின அல்லது ஏதேனும் விதியினை மீறியுள்ளார் என்று திருப்தி பட்டால்,—

அப்போது இந்த சட்டததின் கீழ் உரிமம் பெற்றவருக்கு உரியதாகின்ற ஏனைய பிற தண்டங்களுக்கு குந்தகமின்றி அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர், உரிமம் பெற்றவருக்கு காரணம் காட்டுவதற்கு ஒரு நியாயமான தருணம் நல்கி, உரிமத்தினை ரத்து செய்யவோ அல்லது நிறுத்திவைக்கவோ செய்யலாம் அல்லது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனைகளை முறையே நிறைவேற்றுவதற்காக வைக்கப்பட்ட பிணையத்தினை மொத்தமாக அல்லது பாகமாக இழக்கச் செய்யலாம்.

(2) இதன்சார்பில் உண்டுபண்ணப்படும் ஏதேனும் விதிகளுக்குட்பட்டு அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி பிரிவு 6-ன் கீழ் வழங்கப்பட்ட ஒரு உரிமத்தினை மாற்றவோ திருத்தவோ செய்யலாம்.

9. கலங்களைப் பதிவு செய்தல்.—(1) 1972-ன் கடல்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரக்குழுச் சட்டத்தின் (1972-ன் மத்தியச் சட்டம் 13) பிரிவு 11-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மீன்பிடிக்கலம் தவிர மாநிலத்தில் மீன்பிடிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்த உத்தேசிக்கப்படுகின்ற மற்றும் பாதுகாக்கப்படுகின்ற ஒவ்வொரு கலத்தின் உடமையாளர் இந்த சட்டத்தின் கீழ் அந்த கலத்தினை பதிவு செய்யவேண்டும்.

(2) அத்தகைய கலத்தினை பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அதன் உடமையாளரால் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரிக்கு குறிப்பிடப்பட்ட நமூனாவிலும் குறிப்பிடப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டும்—

(எ) அவர் முதலில் அந்த கலத்தின் சொந்தக்காரராகிய தேதியிலிருந்து ஒரு மாதம் முடிவதற்குள், அல்லது

(பி) இந்த சட்டம் தொடங்கி மூன்றுமாதங்கள் முடிவதற்குள்,

இதில் ஏது பிந்தியதோ அதற்குள் நல்கப்படவேண்டும்:

எனினும் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி எழுத்து மூலம் பதிவு செய்யப்படும் போதிய காரணங்களுக்காக பதிவு செய்வதற்குரிய காலக்கெடுவினை அவர் தகுந்ததெனக்கருதும் கால அளவிற்கு நீடிக்கலாம்.

(3) அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி, கலத்தின் சொந்தக்காரருக்கு அவர் பதிவு செய்த கலத்திற்கு குறிப்பிடப்பட்ட நமூனாவில் ஒரு பதிவுச் சான்றிதழ் வழங்கி குறிப்பிடப்பட்ட நமூவில் அவர் பேணுகின்ற பதிவேட்டில் அந்த சான்றிதழின் விவரங்களை எழுதவேண்டும்.

(4) ஒரு முறை நல்கப்பட்ட பதிவு, அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரியால் அது ரத்து செய்யப்பட்டாலன்றி தொடர்ந்து அமலில் இருக்கும்.

(5) இந்தப்பிரிவின் கீழ் பதிவு செய்யபட்டுள்ள ஒவ்வொரு கலமும் அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரியால் அதற்கு அளிக்கப்பட்டுள்ள ஒரு பதிவு அடையாளத்தைக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள முறையில் காண்பிக்கப்படவேண்டும்.

(6) மீன்பிடிக்கலம் தவிர ஒரு கலத்திற்கும் பிரிவு 6-ன் கீழ் ஒரு அனுமதி பெற உரிமையுடையதல்ல.

10. மீன்பிடிக்கலங்கள் இயக்குவது பற்றி அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரிக்கு தகவல் நல்குதல்.—(1) மீன்பிடிக்கலம் ஒரு துறைமுகப் பகுதியிலிருந்து வேறு ஒரு துறைமுகப் பகுதிக்கு செலுத்தும்போது அத்தகைய மீன்பிடிக்கலத்தின் உரிமையாளர் யாரிடம் அத்தகைய மீன்பிடிக்கலம் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரிக்கு, குறிப்பிடப்பட்டுள்ளபடி, அது சம்பந்தமாக அறிவிப்பு நல்கவேண்டும் மற்றும் எந்த துறைமுக அதிகாரியின் அதிகார எல்லைக்குள் அத்தகைய மீன்பிடிக்கலம் செலுத்தப்படுகிறதோ அவருக்கும் அறிவிப்பு நல்கவேண்டும்.

11. பதிவு செய்யப்பட்டுள்ள மீன்பிடிக்கலங்களின் உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்.—(1) பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மீன்பிடிக்கலங்களின் உரிமையாளருக்கும் அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரிக்கு குறிப்பிடப்பட்டுள்ள கால அளவில் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி எந்த பதிவு செய்யப்பட்டுள்ள மீன்பிடிக்கலத்தையும் எந்த நேரத்திலும், இந்தப்பிரிவின் கீழ் நல்கப்பட்டுள்ள எந்த அறிக்கையின் உண்மையினையும் சரிபார்க்க சோதனையிடலாம்.

12. பிரிவு 6, 8 மற்றும் 9-ன் கீழ் ஆணையின் முடிவு.—மீன்பிடிக்கலத்துக்கு உரிமம் அளித்துக்கொண்டு அல்லது உரிமம் அளிக்க மறுத்துக்கொண்டு, அல்லது இரத்தாக்கிக்கொண்டு, தற்காலிக நீக்கம் செய்துகொண்டு, 'மாற்றிக்கொண்டு அல்லது அத்தகைய உரிமத்தைத் திருத்தம் செய்துகொண்டு அல்லது பதிவு செய்துகொண்டு அல்லது ஒரு கலத்திற்கான உரிமத்தை ரத்தாக்கிக்கொண்டு பிரிவு 6, பிரிவு 8 அல்லது பிரிவு 9-ன் கீழ் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரியின் ஒவ்வொரு தீர்மானமும், பிரிவு 13-ன் கீழ் மேல்முறையீட்டிற்கான ஏதேனும் உரிமைக்கு உட்பட்டு,' இறுதியானதாகும்.

13. உரிமம் அளிக்க மறுக்கும் ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடுகள் முதலியன.—அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரியால் ஒரு ஆணையால் மீன்பிடிக்கலத்திற்கு உரிமம் மறுக்கப்படுவதாலோ, அல்லது ரத்து செய்வதாலோ, தற்காலிக நீக்கம் செய்வதாலோ மாற்றுவதாலோ அல்லது அத்தகைய உரிமத்தைத் திருத்துவதாலோ அல்லது ஒரு கலத்தை பதிவு செய்ய மறுப்பதாலோ அல்லது அத்தகைய கலத்தின் பதிவை ரத்துச்செய்வதாலோ, ஏதேனும் நபர் பாதிக்கப்பட்டால், அந்த நபர் தனக்கு அந்த ஆணை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய குறிப்பிடக்கூடிய அதிகாரக்குழுவுக்கு (இதன் பின்னர் இந்தப்பிரிவு மேல்முறையீட்டு அதிகாரக்குழு என குறிப்பிடப்படும்) ஒரு மேல்முறையீடு செய்யலாம்:

எனினும் மேல்முறையீட்டாளர் போதுமான காரணங்களால்தான் தக்க சமயத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டார் என அது திருப்தியுறுகிறதாயின் குறிப்பிடப்பட்ட கால அளவான முப்பது நாட்கள் காலாவதியான பிறகும்; மேல்முறையீட்டு அதிகாரக்குழு மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒரு மேல்முறையீட்டைப் பெற்றதன் மேல், மேல்முறையீட்டதிகாரக்குழு மேல்முறையீட்டாளருக்கு அவன் சொல்ல வேண்டியதைச் சொல்வதற்கு நியாயமான வாய்ப்பை நல்கி அவன் கருத்தைக் கேட்டபின் அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய ஆணையினை கூடியமட்டும் துரிதமாக பிறப்பிக்கவேண்டும்.

(3) இந்தப்பிரிவின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரக்குழுவினால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும் இறுதியானதாகும்.

அத்தியாயம் III

தண்டம்

14. மீன்பிடிக்கலத்தில் புகுந்து சோதனையிட அதிகாரம்.—அதிகாரமபடுத்தப்பட்ட அதிகாரி இந்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு எதிராக அல்லது அதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணை அல்லது விதிக்கு எதிராக அல்லது உரிமத்தின் ஏதேனும் நிபந்தனைகளுக்கெதிராக ஏதேனும் மீன்பிடிக்கலம் உபயோகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது அல்லது உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது என நம்புவதற்குக் காரணம் இருக்கிறதெனில், அத்தகைய கலத்தினுள் புகுந்து சோதனையிட மற்றும் அத்தகைய கலத்தை நிறுத்தி வைக்க மற்றும் அதற்குள் ஏதேனும் மீன் காணப்பட்டால் கைப்பற்றவும் செய்யலாம்.

15. கைப்பற்றிய மீன்களை விற்பனை செய்தல்.—(1) பிரிவு 14-ன் கீழ் நிறுத்திவைக்கப்பட்டுள்ள மீன்பிடிக்கலத்தை, அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரி குறிப்பிடப்பட்டுள்ளவாறான அத்தகைய இடத்தில் மற்றும் அத்தகைய முறையில் வைக்க வேண்டும்.

(2) கைப்பற்றப்பட்ட மீன் வைப்பதற்கு தகுந்த வசதியில்லையெனில் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி, அத்தகைய மீனை விற்பனை செய்யத்தேவை யென அவர் கருதுகிறாராயின், அத்தகைய மீனை விற்றுவிடலாம் மற்றும் அதன் தொகையை குறிப்பிடப்பட்டுள்ளபடி தீர்ப்பளிக்கும் அதிகாரியின் அலுவலகத்தில் வைப்புத்தொகையாக வைக்கலாம்.

16. தீர்ப்பளித்தல்.—(1) பிரிவு 14-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி, இந்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு எதிராக அல்லது அதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணை அல்லது விதிக்கெதிராக அல்லது உரிமத்தின் ஏதேனும் நிபந்தனைகளுக்கெதிராக ஏதேனும் மீன்பிடிக்கலம் உபயோகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது, அல்லது உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என நம்புவதற்கு காரணம் இருக்கிறதெனில், அவர் தீர்ப்பளிக்கும் அதிகாரிக்கு அதன்மேல் ஒரு அறிக்கை அளிக்கலாம்.

(2) சம்பந்தப்பட்ட எல்லா கட்சிக்காரர்களுக்கும் சொல்லவேண்டியதைச் சொல்வதற்கான நியாயமான வாய்ப்பை நல்கிய பின் அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களின்மேல் தீர்ப்பளிக்கும் அதிகாரி குறிப்பிடப்பட்ட முறையில் ஒரு விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

17. தண்டம்.—(1) தீர்ப்பளிக்கும் அதிகாரி, பிரிவு 16-ன் படியான விசாரணைக்குப்பிறகு ஏதேனும் நபர் இந்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணை அல்லது விதிக்கெதிராக அல்லது உரிமத்தின் ஏதேனும் நிபந்தனைகளுக்கெதிராக ஏதேனும் மீன்பிடிக்கலத்தை உபயோகித்திருக்கிறார் அல்லது உபயோகிக்கக் காரணமாயிருந்திருக்கிறார் அல்லது அனுமதித்திருக்கிறார் என்று தீர்மானிக்கிறதாயின் மற்றும் ஏதேனும் அத்தகைய நபர் தவறு செய்தவர் என தீர்ப்பளிக்கும் அதிகாரியால் கருதப்பட்டால், அவர்—

(எ) சம்பந்தப்பட்ட மீன்களின் மதிப்பு ஆயிரம் ரூபாய் அல்லது அதற்குக் குறைவானால் ஐயாயிரம் ரூபாய்க்கு மிகாமல்,

(பி) சம்பந்தப்பட்ட மீன்களின் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கதிகமானால் மீன்களின் மதிப்பிற்கு ஐந்து மடங்கிற்கு மிகாமல் அல்லது,

(சி) மீன் சம்பந்தப்படாத வேறு ஏதேனும் காரியத்தில் ஐயாயிரம் ரூபாய்க்கு மிகாமல்.

அத்தகைய அபராதத்திற்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரியால் அவர் தண்டிக்கப்பட உரித்தானவராவார்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் விதிக்கப்படும் ஏதேனும் தண்டத்திற்கு புறமே தீர்ப்பளிக்கும் அதிகாரி—

(ஏ) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்ட முறையில் பயன்படுத்த அல்லது பயன்படுத்துவதற்கு காரணமாக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட மீன்பிடிக்கலத்தின் பதிவுச் சான்றிதழ் அல்லது அதன் உரிமம் ஏதேனும் விதத்தில் மீறப்படுகிறதெனில்,

(i) அதது காரியத்திலாவது போன்று ரத்தாக்கவோ அல்லது நீக்கவோ அல்லது

(ii) தீர்ப்பளிக்கும் அதிகாரி தகுந்ததெனக் கருதும் அத்தகைய கால அளவிற்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ செய்யலாம், அல்லது

(பி) அதது காரியத்திலாவதுபோன்று, பிரிவு 14-ன்கீழ் நிறுத்திவைக்கப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட மீன்பிடிக்கலம் அல்லது மீன், அரசினைச் சார்ந்துவிட வேண்டுமென ஆணையிடலாம்.

ஆயினும், அத்தகைய கலத்தின் உரிமையாளரை அல்லது அதன் ஏதேனும் உரிமை உண்டெனக் கோரும் ஏதேனும் நபரை விசாரித்த பிறகு அத்தகைய குற்றம் நிகழாமல் தடுக்க உரிமையாளர் அல்லது அத்தகைய நபர் தகுந்த கவனம் செலுத்தினர் என தீர்ப்பளிக்கும் அதிகாரி திருப்தியுறின் உட்பிரிவு (பி)-ன் கீழ், எந்த மீன்பிடிக்கலத்தினையும் அரசு சட்டரீதியில் கைப்பற்றக் கூடாது.

18. <u>மேல்முறையீட்டு வாரியம் அமைத்தலும், மேல்முறையீட்டு வாரியத்திற்கு மேல்முறையீடு செய்தலும்.</u>—(1) அரசு அரசிதழ் அறிக்கை மூலம் ஒன்றோ அல்லது அதற்கதிகமானதோவான மேல்முறையீட்டு வாரியம் அல்லது மேல்முறையீட்டு வாரியங்களை அமைக்கலாம்.

(2) மேல்முறையீட்டு வாரியம் மூன்று அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும், அவர்களில் ஒருவர் மாவட்ட நீதிபதியாக இருப்பவரோ அல்லது இருந்தவரோ ஆகவேண்டும், அவர் மேல்முறையீட்டு வாரியத்தின் தலைவராக நியமிக்கப்படவேண்டும்.

(3) ஒரே ஒரு மேல்முறையீட்டு வாரியம் அமைக்கப்படின், அந்த மேல்முறையீட்டு வாரியத்திற்கு மாநிலம் முழுவதும் அதிகார வரம்பிருக்கவேண்டும், மற்றும் ஒன்றிற்கதிகமான மேல்முறையீட்டு வாரியங்கள் அமைக்கப்படின், அரசு அரசிதழ் அறிக்கை மூலம் ஒவ்வொரு மேல்முறையீட்டு வாரியத்தின் அதிகார வரம்பையும் குறிப்பிடலாம்.

(4) தீர்ப்பளிக்கும் அதிகாரியின் ஒரு ஆணையால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நபர் அந்த ஆணை உண்டுபண்ணப்பட்ட முப்பது நாட்களுக்குள் அத்தகைய மேல் முறையீட்டைக்கேட்க அதிகார வரம்புடைய மேல்முறையீட்டு வாரியத்திற்கு ஒரு மேல்முறையீடு செய்யலாம்:

ஆயினும் மேல்முறையீட்டாளர் தக்க நேரத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டார் எனும் தகுந்த காரணம் இருப்பதாக மேல்முறையீட்டு வாரியம் திருப்தியுறுகிறதாயின் மேல்சொன்ன முப்பது நாட்கள் முடிவடைந்தபிறகு ஏதேனும் மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம், ஆனல் மேற்சொன்ன நாளிலிருந்து அறுபது நாட்கள் கடந்த பிறகு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(5) மேல்முறையீடு செய்யும் பொழுது, மேல்முறையீட்டு ஆணைக்கெதிராக விதிக்க வேண்டிய தண்டத்தொகை வைப்புத்தொகையாக வைக்கவில்லையெனில், இந்தப் பிரிவின் கீழ் மேல்முறையீட்டு வாரியத்தினால் ஒரு மேல் முறையீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது:

ஆயினும், இதன்சார்பாக மேல்முறையீட்டாளரால் செய்யப்படும் ஒரு மனுவின்மேல், மேல்முறையீட்டுக்கழகம், இந்தத் துணைப்பிரிவின் கீழ் வைக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை மேல்முறையீட்டாளருக்கு எதிர்பாராத் தொல்லைகள் ஏற்படுத்தும் என அது கருதினால், எழுத்து மூலம் ஆணையின் வாயிலாக, அத்தகைய வைப்புத்தொகையை நிபந்தனைகளின்றியோ, அல்லது அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டோ, விட்டுவிடலாம்.

(6) பிரிவு 4-ன் கீழ் ஒரு மேல்முறையீடு கிடைக்கப்பெற்றதன்மேல் மேல்முறையீட்டுக்கழகம், அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய விசாரணையில் மேற்கொண்ட பிறகு மற்றும் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அவர்களது கருத்துக்களைச் சொல்லத் தகுந்த வாய்ப்பு நல்கிய பிறகு மேல்முறையீடு செய்த ஆணையை உறுதிப்படுத்தவோ, மாற்றவோ அல்லது தள்ளுபடி செய்யவோ செய்யலாம் மற்றும் மேல்முறையீட்டுக்கழகத்தின் தீர்ப்பு இறுதியானதாக இருக்கும், மற்றும்—

(எ) துணைப்பிரிவு (5)-ன் கீழ் வைப்புத்தொகையாக வைத்த தண்டத் தொகை, மேல்முறையீட்டுக்கழகத்தால், செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்ட தண்டத்தைவிட அதிகமாயின், அந்த அதிகத்தொகையை அல்லது

(பி) தண்டம் சுமத்திகொண்டுள்ள ஆணையை மேல்முறையீட்டுக் கழகம் தள்ளுபடி செய்கிறதாயின் தண்டம் சம்பந்தமாக வைத்துள்ள மொத்த வைப்புத் தொகையையும் மேல்முறையீட்டாளருக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

19. <u>மேல்முறையீட்டுக்கழகம் சீராய்வு செய்தல்.</u>—பிரிவு 17-ன் கீழ் தீர்ப்பளிக்கும் அதிகாரியால் பிறப்பிக்கப்பட்டதும் பிரிவு 18-ன் கீழ் அதற்கெதிராக ஒரு மேல்முறையீடும் செய்யப்படாததுமான ஏதேனும் ஆணையின் ஆவணங்களை, அத்தகைய ஆணையின் சட்டத்தன்மை அல்லது ஒழுங்கு அல்லது நடைமுறை ஒழுங்கு பற்றி சுயமாக திருப்திப்படும் பொருட்டு மேல்முறையீட்டுக்கழகம் பெற்றுப் பரிசோதிக்கலாம் என்பதுடன் அது தகுந்ததெனக் கருதும் அது சம்பந்தமான அத்தகைய ஆணையினைப் பிறப்பிக்கலாம்:

ஆயினும், இந்த காரியத்தில் பாதிக்கப்பட்ட நபருக்கு அவர்களது கருத்துக்களை சொல்வதற்குபோதுமான வாய்ப்பு நல்காமல் அத்தகைய ஒரு ஆணையும் உண்டுபண்ணக்கூடாது.

20. <u>இந்த சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ளல் சம்பந்தமாக மேல்முறையீட்டுக்கழகத்துக்கும் தீர்ப்பளிக்கும் அதிகாரிக்குமுள்ள அதிகாரங்கள்.</u>—(1) தீர்ப்பளிக்கும் அதிகாரிக்கு மற்றும் மேல்முறையீட்டுக்கழகத்திற்கு ஒரு விசாரணையை மேற்கொள்ளும்பொழுது, 1908-ன் உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு (1908-ன் மத்தியச் சட்டம் 5)-ன் கீழ் சிவில் நீதிமன்றத்திற்கு உரித்தான எல்லா அதிகாரங்களும் கீழ்க்காணும் காரியங்கள் சம்பந்தமாக ஒரு சிவில் வழக்கை விசாரணை செய்யும்பொழுதும் உண்டு, அவையாவன:—

(எ) சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புதல் மற்றும் அவர்களின் வருகையை கட்டாயப்படுத்தல்;

(பி) ஏதேனும் ஆவணங்களைக் கண்டுபிடித்து சமர்ப்பிக்கும்படி வேண்டிக்கொள்ளல் ;

(சி) ஏதேனும் நீதிமன்றம் அல்லது அலுவலகத்திலிருந்து ஏதேனும் பொது ஆவணத்தை அல்லது அதன் நகல் தேவைப்படுதல் ;

(டி) ஆணை உறுதிப்பத்திரத்தின்மேல் சாட்சியம் பெறுதல் மற்றும்

(இ) சாட்சிகள் அல்லது ஆவணங்களை பரிசோதனை செய்ய ஆணைக் குழுக்களை வழங்குதல்.

(2) தீர்ப்பளிக்கும் அதிகாரி அல்லது மேல்முறையீட்டுக்கழகம் இந்த சட்டத்தின் கீழ் ஏதேனும் அதிகாரங்களைப் பிரயோகிக்கும் பொழுது, 1973-ன் குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின் (1974-ன் மத்தியச் சட்டம் 2) பிரிவுகள் 345 மற்றும் 346-ன் நோக்கங்களுக்காக ஒரு சிவில் நீதிமன்றமாகக் கருதப்படும்.

21. கம்பெனிகளின் குற்றங்கள்.—(1) ஒரு கம்பெனி இந்த சட்டத்தின் கீழ் ஒரு குற்றம் செய்யுமிடத்து, குற்றம் செய்யப்படும் அந்த நேரத்தில், கம்பெனியின் பணிகள் மேற்கொள்ளலில் சம்பந்தப்பட்டோ அல்லது பொறுப்பிலோ இருந்த ஒவ்வொரு நபரும் கம்பெனியும் அந்தக்குற்றம் செய்தவர் எனக் கருதப்படவேண்டும் மற்றும் அவ்வாறே நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டனை அளிக்கப்பட உரித்தானவராக்கப்படவும் வேண்டும்:

எனினும் அந்தக்குற்றம் அவருடைய அறிவுக்குட்பட்டு நிகழ்ந்ததல்ல அல்லது அத்தகைய குற்றம் செய்தலைத் தடைசெய்ய எல்லாவிதமான ஜாக்கிரதையும் அவர் பிரயோகித்தார் என அவர் நிரூபித்தால் இந்தத் துணைப் பிரிவில் அடங்கியுள்ள எவையும் அத்தகைய ஏதேனும் நபரை அத்தகைய ஏதேனும் தண்டனைக்கு உரித்தானவராக்காது.

(2) துணைப்பிரிவு (1)-ல் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறு இருந்த போதிலும், இந்த சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றம், ஏதேனும் டைரக்டர், மானேஜர் அல்லது செயலாளர் அல்லது வேறு அதிகாரியின் அனுமதியோடு அல்லது அந்தரங்க அனுமதியோடு அல்லது அவர்களின் ஏதேனும் அசட்டையின் பாகமாக நிகழ்ந்திருக்குமிடத்து, அத்தகைய டைரக்டர், மானேஜர், செயலாளர், அல்லது மற்ற அதிகாரி அந்தக்குற்றம் செய்தவர் எனக் கருதப்படவேண்டும். மற்றும் எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள உரித்தானவராக்கப்பட்டபிறகு அவ்வாறே தண்டனையும் அளிக்கப்படவேண்டும்.

விளக்கம்.—இந்தப்பிரிவின் நோக்கங்களுக்காக,—

(எ) "கம்பெனி" என்பது ஒருங்கிணைந்த ஏதேனும் அமைப்பு மற்றும் ஒரு தொழிற்சாலை அல்லது வேறு தனி நபர்களின் கூட்டும் உட்படும், மற்றும்

(பி) ஒரு தொழிற்சாலை சம்பந்தமாக "டைரக்டர்" எனில் அந்த தொழிற்சாலையின் ஒரு பங்குதாரர் எனப் பொருட்படும்.

அத்தியாயம் IV

பலவகை

22. தவிர்ப்புகள்.—(1) இந்த சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் மத்திய அரசை அல்லது ஏதேனும் மாநில அரசை அல்லது ஏதேனும் பொது உடைமைத் தாபனத்தைச் சார்ந்த கலங்களை ஆய்வுசெய்ய பொருந்தாது.

(2) இந்த சட்டத்தின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு ஏதேனும் குறிப்பிடப்பட்ட பகுதி அல்லது குறிப்பிடப்பட்டப்பகுதிகளில் மீன் பிடிப்பதற்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் வகை அல்லது வகைகளின் மீன்பிடிக்கலங்களின் காரியத்தில் பொது நல விருப்பத்தை முன்நிறுத்தி இந்த சட்டத்தின் எல்லா அல்லது ஏதேனும் ஏற்பாடுகள் பொருந்தாது என அரசு கருதினல், அரசிதழ் அறிக்கை மூலம், அவைகள் சுமத்தத் தகுந்த தெனக்கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இத்தகைய குறிப்பிடப் பட்ட பகுதி அல்லது குறிப்பிடப்பட்டப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்காக உபயோகிக்கப்படும் அத்தகைய வகை அல்லது வகைகளிலான மீன்பிடிக்கலங்களை அவைகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவைபோல இந்த சட்டத் தின் எல்லா அல்லது ஏதேனும் ஏற்பாடுகளின் செயலிலிருந்து விலக்களிக் கலாம்.

23. நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் செயலுக்கு பாதுகாப்பு.—(1)-ல் இந்த சட்டம் அல்லது இதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணை அல்லது விதி அனுசரித்து நல்லெண்ணத்துடன் மேற்கொண்ட அல்லது மேற் கொள்ள உத்தேசிக்கும் எந்தச் செயலுக்காக அரசு அல்லது ஏதேனும் அதிகாரி அல்லது அதிகாரக்குழுவிற்கு எதிராக ஒரு வழக்கோ அல்லது குற்றவழக்கோ அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளோ மேற்கொள்ளக்கூடாது.

(2) இந்த சட்டம் அல்லது இதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் ஆணை அல்லது விதி அனுசரித்து நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப் பட்ட ஏதேனும் செயலினல் ஏற்பட்ட ஏதேனும் நாசம் அல்லது ஏற்படவிருக்கும் நாசத்திற்கு அரசு அல்லது ஏதேனும் அதிகாரி அல்லது அதிகா ரக்குழுவுக்கு எதிராக ஒரு வழக்கோ அல்லது வேறு சட்டநடவடிக்கைகளோ மேற்கொள்ளக்கூடாது.

24. விதிகள் உண்டுபண்ண அதிகாரம்.—(1) அரசு, இந்தசட்டத்தின் ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதற்காக அரசிதழ் அறிவிக்கை மூலம் விதிகள் உண்டாக்கலாம்.

(2) குறிப்பாக, மற்றும் மேற்சொன்ன அதிகாரங்களின் பொதுத்தன் மைக்கு குந்தகம் விளைவிக்காமல், அத்தகைய விதிகள், கீழ்க்காணும் எல்லா அல்லது ஏதேனும் காரியங்களுக்கு வகை செய்யலாம், அவையாவன:—

(ஏ) பிரிவு 4-ன் துணைபபிரிவு (1)-ன் கீழ் ஒரு ஆணை உண்டாக்குகையில் பரிசீலிக்கப்படவேண்டிய காரியங்கள்.

(பி) பிரிவு 6-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் உரிமத்திற்கான மனுவின் நமூனு அதில் அடங்கியிருக்கும் விபரங்கள் மற்றும் அதோடு சேர்த்து அனுப்ப வேண்டிய கட்டணம்.

(சி) பிரிவு 6-ன் துணைப்பிரிவு 4-ன் உட்பிரிவு (டி)-யின் கீழ் உரிமம் வழங்கும் போது அல்லது மறுக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரி யங்கள், உரிமம் பெறுவதற்காக செலுத்தும கட்டணம் மற்றும் உரிமத்தின் நிபந்தனைகளை சரியாக செயல்படுத்துவதற்கான வைப்புத்தொகை.

(டி) பிரிவு 6-ன்படி உரிமம் வழங்கும்போது அல்லது நிராகரிக்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைகள் அல்லது உரிமத்தை ரத்துசெய்தல் நிறுத்தி வைத்தல் அல்லது திருத்துவதற்கான அல்லது பிரிவு 9-ன் படி, கலத்தை பதிவு செய்வதற்கான அல்லது பதிவினை ரத்து செய்வதற்கான முறைகள்.

(இ) பிரிவு 9-ன் கீழ் ஒரு கலத்தின் பதிவிற்கான மனுவின் நமூனு அத்தகைய மனுவில் அடங்கியிருக்கும் விபரங்கள், மற்றும் மனுவோடு சேர்த்து அனுப்பவேண்டிய கட்டணம், அந்த பிரிவின் துணைப்பிரிவு (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு சான்றிதழின் நமூனு மற்றும் பதிவேட்டில் நமூனு, மற்றும் அந்தப் பிரிவின் துணைப்பிரிவு (5)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு அடை யாளத்தினை தெரியும்படி காட்டவேண்டிய ...

(எப்) பிரிவு 10-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகவல் நல்கப்பட வேண்டிய முறை,

(ஜி) பிரிவு 11-ன் துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நேரமும் முறையும்.

(எச்) பிரிவு 13-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் மேல்முறையீடுகள் நல்கப்படவேண்டிய அதிகாரக்குழு.

(ஐ) பிரிவு 15-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் தடை செய்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடிக்கலம் வைக்கப்பட்டிருக்கவேண்டிய இடம் மற்றும் முறை மற்றும் கைப்பற்றப்பட்டுள்ள மீனின் விற்றுமுதல் அந்த பிரிவின் துணைப்பிரிவு (2)-ன் கீழ் தீர்ப்பளிக்கும் அதிகாரியிடம் ஒப்படைக்கப்படவேண்டிய முறை.

(ஜெ) பிரிவு 16-ன் துணைப்பிரிவு (2)-ன் கீழ் தீர்ப்பளிக்கும் அதிகாரியால் நடத்தப்படும் விசாரணையின் நடைமுறை.

(கெ) செயர்மானைத்தவிர மற்ற மேல்முறையீட்டுக்கழக அங்கத்தினர்களின் தகுதிகள், மேல்முறையீட்டுக்கழக செயர்மான் மற்றும் மற்ற அங்கத்தினர்களுக்கு நல்கவேண்டிய கட்டணங்கள் மற்றும் படிகள், மற்றும் மேல்முறையீட்டுக் கழகத்தின் நடைமுறை.

(எல்) இந்த சட்டத்தின் கீழ் ஆவணங்களின், அல்லது ஆணைகளின் அல்லது நகல்கள் விநியோகிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் அதிகாரி அல்லது அதிகாரக்குழுவால் அளிக்கப்பட்ட ஏதேனும் அழியம் சம்பந்தமான காரியங்களுக்காக செலுத்தவேண்டிய கட்டணங்கள்.

(எம்) இந்த சட்டத்தின் கீழ் விதிமூலம் வகை செய்யப்படவிருக்கிற அல்லது வகை செய்யப்படுகிற ஏதேனும் வேறு காரியங்கள்,

(3) இந்தப் பிரிவின் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஒவ்வொரு விதியும் அது உண்டுபண்ணப்பட்ட உடன்தானே, கூட்டத்தொடரில் இருக்கும் பதினன்கு நாட்கள் மொத்தக்கால அளவுள்ள ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அடுத்தடுத்த கூட்டத்தொடரிலோவான சட்டப் பேரவையில் வைக்கப்படவேண்டும், மற்றும் அவ்வாறு வைக்கப்பட்டக்கூட்டத்தொடர் அல்லது தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னால் சட்டமன்றப் பேரவை அந்த விதியில் ஏதேனும் மாற்றம் உண்டு பண்ணினால் அல்லது அந்த விதி உண்டுபண்ணவேண்டாம் என தீர்மானித்தால், அதன்பிறகு அந்த விதி அதது காரியத்திலாவதுபோன்று அத்தகைய மாற்றப்பட்ட விதத்தில்தான் பயன்உடைத்தாய் இருக்கவேண்டும், அல்லது பலனில்லாமலிருக்கவேண்டும். எனவே, எவ்வாறாயினும் ஏதேனும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் அந்த விதியின் கீழ் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஏதேனும் செல்லுபடியாகும் தன்மைக்கு எதிராக இருக்கக்கூடாது.

25. ரத்தாதலும் தவிர்ப்பும்.—(1) 1980-ன் கேரள கடல் மீன் பிடித்தல் ஒழுங்கு செய்தல் அவசரச் சட்டம் (1980-ன் 12) இதனால் ரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு ரத்து செய்யப்பட்டபோதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் காரியம் அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் இந்த சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருப்பதாக அல்லது மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

கேரள அரசு

சட்டம் (சட்டம் இயற்றல்-எ) துறை

அறிவிக்கை

எண். 11280/சட்டம் இயற்றல் (எ) 1/81/சட்டம்

திருவனந்தபுரம், 1981 செப்டம்பர் 29 / 1903 அஸ்வினு 7

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுத் தகவலுக்கென இதன் மூலம் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப்பேரவையினால் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு 1981 செப்டம்பர் 26-ம் நாளன்று ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
தனிச் செயலாளர் (சட்டம்).

The Kerala Requisitioning and Acquisition of Property Act, 1981

1981-ன் 27-வது சட்டம்

1981-ன் கேரள உடைமை கைப்பற்றுதல் மற்றும் உரிமைபெறல் சட்டம்

யூனியனின் தேவைகளுக்கல்லாது பொதுதேவைகளுக்காக உடைமை கைப்பற்றவும் உரிமை பெறவும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

தோற்றுவாய்.—யூனியனின் தேவைகளுக்கல்லாது பொதுத்தேவைகளுக்காக உடைமை கைப்பற்றவும் உரிமை பெறவும் வகை செய்வது உகந்ததென்பதால்,

இந்தியக் குடியரசின் முப்பத்து இரண்டாவது ஆண்டில் இது பின்வருமாறு சட்டமாக்கப்படட்டும்.

1. சுருக்கத் தலைப்பும் ஆரம்பமும்.— இந்த சட்டம் 1981-ன் கேரள உடைமை கைப்பற்றுதல் மற்றும் உரிமை பெறல் சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது கேரள மாநிலம் முழுவதும் வியாபிக்கும்.

(3) இது உடனடி அமலுக்கு வரும்.

2. சொற்பொருள் விளக்கங்கள்.—சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்பட்டாலன்றி இச்சட்டத்தில்,—

(எ) "தீர்ப்பு" எனில் பிரிவு 8-ன் கீழ் மாவட்ட ஆட்சியாளரின் ஏதேனும் தீர்ப்பு எனப் பொருட்படும்,

(பி) "நிலச்சொந்தக்காரர்" எனில் தனக்காகவோ அல்லது வேறு ஏதேனும் நபருக்காகவோ, அவர் பெயரிலோ அல்லது அவர் சார்பாகவோ அல்லது பொறுப்பாளராகவோ அல்லது காப்பாளராகவோ அல்லது வேறு ஏதேனும் நபருக்காகப் பெற்றுக்கொள்பவராகவோ அச்சமயத்திற்கென ஏதேனும் கட்டிடத்தின் வாடகை பெற்றுக்கொள்கின்ற அல்லது பெற்றுக்கொள்ளும் உரிமை வாய்த்த அந்தகைய நபர் அல்லது அக்கட்டிடம் வேறொரு நபருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் அதற்கான வாடகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அல்லது பெற்றுக்கொள்ள உரிமையுடைய நபர் எனப் பொருட்படும்.

(சி) ஏதேனும் சொத்து சம்பந்தமாக "அக்கறையுடைய்நபர்" எனில் இந்த சட்டத்தின் கீழ் அந்த உடைமையினைக் கைப்பற்றியதற்காக அல்லது உரிமை பெற்றதற்காக செலுத்தப்படவேண்டிய நஷ்டஈட்டின் மீது வட்டிக்கு உரிமை கோருகின்ற அல்லது உரிமைகோரும் தகுதிபெற்ற எல்லா நபர்களும் என்பது உட்படும்,

(டி) "கட்டிடம்" எனில், ஏதேனும் கட்டிடம் அல்லது அதன் பாகம் எனப் பொருட்படுவதுடன்,—

(i) இத்தகைய கட்டிடத்துடன் அதன் பாகத்துடன் இணைந்துள்ள தோட்டம், பூமி மற்றும் புறவீடு ஏதேனுமிருப்பின் அதுவும்,

(ii) மேலும் பயன் அனுபவிக்கும் பொருட்டு இத்தகைய கட்டிடத்துடன் அல்லது அதன் பாகத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் இணைப்புகள் என்பதும் உட்படும்.

(இ) "குறிப்பிடப்பட்ட" எனில் இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டவை எனப் பொருட்படும்,

(எப்) "சொத்து" எனில் எல்லா வித அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் எனப் பொருட்படுவதுடன் அத்தகைய சொத்தில் அல்லது அதன்மீதுள்ள ஏதேனும் உரிமை என்பதும் உட்படும்,

(ஜி) "மாநிலம்" எனில் கேரள மாநிலம் எனப் பொருட்படும்,

(எச்) "குடியிருப்பாளர்" எனில், ஏதேனும் கட்டிடத்திற்காக எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக வாடகை செலுத்தப்படுகின்றதோ அந்த நபர் எனப்பொருட்படுவதுடன் அப்போது அமலில் இருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் குடியிருப்பாளரிடமிருந்து உரிமை பெற்றுக்கொண்டுள்ள அத்தகைய துணை குடியிருப்பாளர்கள் மற்றும் வேறு நபர்கள் என்பதும் உட்படும்.

3. உடைமையினைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.—(1) யூனியனின் தேவைக்காக அல்லது ஏதேனும் பொதுத்தேவைக்கு ஒரு உடைமை அவசியமானதென அல்லது அவசியமாக இருக்கக்கூடியதெனவும் அதன் உடைமை கைப்பற்றுதல் அவசியமெனவும் அரசு கருதினால், அரசு,—

(எ) (உடைமை கைப்பற்றப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு) எழுத்து வடிவிலான அறிவிப்பின் மூலம்,—

(i) அசையாச் சொத்தின் காரியத்தில் அவருக்கு அறிவிப்பு நல்கப்பட்டு, பதினைந்து நாட்களுக்குள்ளும்,

(ii) அசையும் சொத்தின் காரியத்தில் அவருக்கு அறிவிப்பு நல்கப்பட்ட மூன்று நாட்களுக்குள்ளும்,—

அன் உடைமை கைப்பற்றப்படக்கூடாது எனக் காரணம் காட்டுமாறு அதன் உடைமையாளரிடம் அல்லது அந்த உடைமையினைக் கைவசம் வைத்திருக்கும் வேறு ஏதேனும் நபரிடம் தேவைப்படவேண்டும்;

(பி) அரசின் அனுமதியின்றி உடைமையாளரோ அல்லது கைவசம் வைத்திருக்கும் வேறு ஏதேனும் நபரோ உடைமையினை விற்கக்கூடாது அல்லது மாற்றம் செய்யக் கூடாது அல்லது அறிவிப்பில் குறிப்பிடக்கூடிய இரண்டு மாதங்களுக்கு மிகாத காலம் முடிவுறும் முன் அதனை ஒரு குடியிருப்பாளருக்கு வாடகைக்கு விடக்கூடாது என உத்தரவின் மூலம் கட்டளையிடலாம்

(2) உடைமையில் உரிமையுடைய ஏதேனும் நபரால் அல்லது உடைமையினைக் கைவசம் வைத்திருக்கும் ஏதேனும் நபரால் காரணம் காண்பிக்கப்பட்டிருந்தால் அத்தகைய காரணங்களைப் பரிசிலனை செய்தபின் உடைமை கைப்பற்றப்படுவது அவசியமென அல்லது உகந்ததென அரசுக்குத் தோன்றினால் எழுத்து வடிவிலான உத்தரவின்மூலம் உடைமையைக் கைப்பற்றலாம் என்பதுடன் அது சம்பந்தமாகத் தேவையெனத்தோன்றும் அல்லது உகந்ததெனத் தோன்றும் உத்தரவுகளையும் பிறப்பிக்கலாம்.

எனினும்,—

(ஏ) உடைமை அதன் உடைமையாளரால் நல்லெண்ணத்துடன் அவரது அல்லது அவரது குடும்பத்தினரின் குடியிருப்புக்கெனப் பயன்படுத்தப்பட்டால், அல்லது

(பி) பொது மக்களால் கடவுள் வழிபாடுக்கு மட்டுமே பயன்படுத்தப் பட்டால் அல்லது பள்ளிக்கூடமாகவோ, ஆகபத்திரியாகவோ, அல்லது பொது நூலகமாகவோ அல்லது அனாதை இல்லமாகவோ அல்லது இத்தகைய நூலகம் அல்லது வழிபடுமிடம் அல்லது ஆகபத்திரி, பள்ளிக்கூடம் அல்லது அனாதை விடுதி ஆகியவைகளின் மேற்பார்வையில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களின் குடியிருப்புக்காகவோபயன்படுத்தப்பட்டால்,

அத்தகைய எந்த சொத்தின் அல்லது அதன் பாகத்தின் உடைமையும் கைப்பற்றப்படக்கூடாது:

எனினும், மேலும், இவ்வாறு தேவைப்படப்பட்ட சொத்தில் துணைப்பிரிவு (1)-ன் கீழ் அவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்ட தேதிக்குப்பின் தொடர்ந்து வருகின்ற இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்கு ஒரு குடியிருப்பாளரால் குடியிருப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கட்டிடம் அடங்கியதாக இருந்தால், அரசு தகுந்ததெனக் கருதக்கூடிய வேறு குடியிருப்பிடத்திற்கு வகை செய்துகொடுக்க வேண்டும்.

4. <u>கைப்பற்றப்பட்ட உடைமையினைக் கைவசம் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம்</u>.—(1) பிரிவு 3-ன் கீழ் ஏதேனும் உடைமை கைப்பற்றப்பட்டிருந்தால் அரசு, எழுத்து வடிவிலான அறிவிப்பின் மூலம், அதனில் குறிப்பிடப்படக்கூடிய காலத்திற்குள் உடைமையின் உரிமையை அரசிடம் அல்லது இதற்கென அரசால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபரிடம் விட்டுவிடவேண்டும் அல்லது ஒப்படைக்கவேண்டும் என அதன் உடமையாளருக்கு அல்லது அதனைக் கைவசம் வைத்திருக்கும் நபருக்கு உத்தரவிடலாம்.

(2) எந்த நபரேனும் துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள உத்தரவுக்கு இணங்க மறுத்தால் அல்லது இணங்கத் தவறினால் அரசு அல்லது முறைப்படி அரசால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நபர், அந்த உடைமையின் உரிமையைக் கைவசம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அதற்கெனத் தேவையான படையைப் பயன்படுத்தவும் செய்யலாம்.

5. <u>கைப்பற்றப்பட்ட உடைமை மீதான உரிமைகள்.</u>—(1) பிரிவு 3-ன் கீழ் கைப்பற்றப்பட்ட எல்லா உடைமைகளும் உடைமை கைப்பற்றுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்படக்கூடிய அந்தவகைய தேவைக்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

(2) பிரிவு 3-ன் கீழ் ஏதேனும் கட்டிடம் கைப்பற்றப்பட்டிருந்தால் அரசு, அறிவிப்பு நல்கியபின் அதில் குறிப்பிடப்படக்கூடிய காலத்திற்குள் தேவையானதும், அப்பகுதியில் நிலச்சொந்தக்காரர்களால் சாதாரணமாகச் செய்யப்படக்கூடியதும் அறிவிப்பில் குறிப்பிடக்கூடியதுமான பழுதுபார்க்கும் பணியை நிறைவேற்றுமாறு நிலச் சொந்தக்காரருக்கு உத்தரவிடலாம் மேலும், நிலச் சொந்தக்காரர் அத்தகைய அறிவிப்பிற்கிணங்க ஏதேனும் பழுது பார்க்கும் பணியை நிறைவேற்றத் தவறினால் அரசு, நிலச் சொந்தக்காரரின் செலவில் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதுபார்க்கும் பணியை நிறைவேற்றச் செய்யவேண்டும் என்பதுடன் அதற்கான செலவுவேறு எந்தவிதமான வசூல் முறைக்கும் குந்தகமின்றி நிலச்சொந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய நஷ்ட ஈட்டிலிருந்துக் குறைவு செய்யப்படவும் வேண்டும்.

6. <u>கைப்பற்றல் செய்வதிலிருந்து விடுதலை.</u>—(1) அரசு, எந்தச் சமயத்திலும் இந்த சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட எந்த உடைமையையும் கைப்பற்றப்படுவதிலிருந்து விடுவிக்கலாம் என்பதுடன் இயன்றமட்டும் நியாயமான அழிவு தேய்வுகளாலும் தவிர்க்கமுடியாத சக்தியினாலும் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு மட்டும் உட்பட்டு, அச்சொத்துக்கைப்பற்றப்பட்டபோது இருந்த அதே நல்ல நிலைமையில் அதனைப் பாதுகாக்கவேண்டும்.

எனினும் எந்த நோக்கத்திற்காக உடைமைக்கைப்பற்றப்பட்டதோ அந்தப் பயன் முடிவுற்றுவிட்டால், அரசு, பிரிவு 7-ன் கீழ் உரிமை கைப்பற்றப்பட்டிருந்தாலன்றி அவ்வுடைமையினை இயன்றளவு விரைவில் உடைமை கைப்பற்றப்படுவதிலிருந்து விடுவிக்கவேண்டும்.

(2) ஏதேனும் உடைமை கைப்பற்றப்படுவதிலிருந்து விடுவிக்கப்படவேண்டியிருந்தால், அரசு, எந்தக் காரியத்திலேனும் விசாரணை செய்தல் அல்லது செய்வித்தல் தேவையெனக் கருதினால் அத்தகைய விசாரணை நடத்தியபின் எழுத்து வடிவிலான உத்தரவின் மூலம், உடைமையின் உரிமை எந்த நபருக்குக் கொடுக்கப்படவேண்டும் என குறிப்பிடவேண்டும், மேலும் அத்தகைய உரிமை செயலுடைத்தாகும்வரை சொத்தின் உடைமை கைப்பற்றப்பட்டபோது எந்த நபரிடமிருந்து அதன் உரிமை கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கோ அல்லது அத்தகைய நபருக்கு உரிமைப்பட்ட வாரிசுதாரிடமோ கொடுக்கப்படவேண்டும்

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழ் உள்ள உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு உடைமையின் உரிமையைக் கொடுப்பது அவ்வுடைமை சம்பந்தமான அரசின் எல்லாப் பொறுப்புகளும் விட்டுவிடப்பட்டதாக இருக்கும். ஆனால், உடைமையின் கைவச உரிமை கொடுக்கப்பட்டுள்ள நபருக்கெதிராக முறைப்படி சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேறு ஏதேனும் நபருக்கு உரிமையுடையதான உடைமை சம்பந்தப்பட்ட எந்த உரிமைக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடாது.

(4) கைப்பற்றப்பட்ட உடைமையின் கைவச உரிமை எந்த நபருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அந்த நபர் காணப்படவில்லையாயின் அல்லது அவரது சார்பில் ஏஜென்டோ, அல்லது கைவச உரிமை பெற்றுக்கொள்ளும் அதிகாரமுடைய வேறு நபரோ இல்லையாயின் அரசு, உடைமை கைப்பற்றப்படுவதிலிருந்து சொத்து விடுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் அறிவிப்பினை கெசற்றில் அல்லது அவ்வட்டாரத்தில் அதிக விற்பனையாகும் நாளிதழ்களில் வெளியிடசெய்யவேண்டும் மேலும், அசையாச் சொத்தின் காரியத்தில், இத்தகைய அறிவிப்பு மிகத்தெளிவாகக்கூடிய உடைமையின் பாகத்தில் ஒட்டப்படவேண்டும்.

(5) துணைப்பிரிவு (4)-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு அவ்வுட்பிரிவில் தேவைப்பட்டவாறு வெளியிடப்பட்டுள்ள போது அத்தகைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து அவ்வாறு அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளன்றும் அன்று முதலும் உடைமை கைப்பற்றப் படுவதற்குட்பட்டதல்லாதாகும் என்பதுடன் அதன் கைவச உரிமையைப்பெற்றுக் கொள்ளும் தகுதியுடைய நபருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படவும் வேண்டும். மேலும் மேற்கூறிய நாளுக்குப்பின் எந்தக் காலத்திற்காகவும் அவ்வுடைமை சம்பந்தமாக எந்தவிதமான நஷ்ட ஈடுக்கும் அல்லது வேறு உரிமைக்கோரிக்கைக்கும் அரசு பொறுப்புடையதாகாது.

(6) இந்த சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உடைமை அல்லது அதன் ஏதேனும் முக்கியமான பாகம் தீயினாலோ, பூகம்பத்தினாலோ, கொடுங்காற்றினாலோ, வெள்ளப்பெருக்கினாலோ அல்லது புயலின் அல்லது ஏதேனும் கூட்டத்தின் அல்லது தடுக்கமுடியாத வலிமையான தாக்குதலினாலோ முழுவதுமோ அல்லது பாகமோ எந்தத் தேவைக்காக அந்த உடமை கைப்பற்றப்பட்டதோ அந்தத் தேவைக்கு என்றென்றுமாகப் பயன்படாதாக்கப் பட்டால்; அந்த உடைமை கைப்பற்றுதல், அரசின் விருப்பப்படி, ரத்துச் செய்யப்படவேண்டும்.

எனினும்,—

(i) இத்தகைய உடைமைக்கு ஏற்பட்டுள்ள சேதம் அரசின் தவறான செய்கையினாலோ அல்லது தவறினாலோ ஏற்பட்டதாயின், அல்லது

(ii) உடைமைக் கைப்பற்றப்படுவதற்காக அல்லது இத்தகைய உடைமைக்கு இத்தகைய சேதம் ஏற்பட்டிருக்காதெனில்

இத்துணைப்பிரிவின் பயன் அரசுக்குக் கிடைக்காது.

7. <u>கைப்பற்றப்பட்ட உடைமையின் உரிமையைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.</u>—ஏதேனும் உடைமை கைப்பற்றதலுக்குட்பட்டிருக்கும்போது அரசு, யூனியனின் தேவைக்கல்லாது பொதுத்தேவைக்கென அதன் உரிமை கைப்பற்றுதல் தேவையெனக் கருதினால், இப்பிரிவு அனுசரித்து அவ்வுடைமையின் உரிமையினைக்கைப்பற்ற அரசுமுடிவு செய்துள்ளதென கெசட்டில் விளம்பரம் செய்வதன் மூலம் எந்தச் சமயத்திலும் அவ்வுடைமையினைக் கைப்பற்றலாம்:

எனினும் அவ்வித அறிவிப்பு வழங்கப்படுவதற்கு முன்பு, அந்த சொத்து உரிமைப்படுத்தப்படாததற்குத் தகுந்த காரணம் காண்பிக்குமாறு சொத்தின் உடைமையாளரையோ அல்லது அத்தகைய சொத்தில் அக்கறையுடைய வேறு நபரையோ அரசு அழைக்கவேண்டும். மேலும் சொத்தில் அக்கறையுடைய ஏதாவது நபர் ஏதேனும் காரணம் காண்பித்தால் அத்தகைய காரணங்களை ஆலோசித்தபிறகு மற்றும் அந்த நபர்களுக்கு விசாரிக்கப்படுவதற்குத் தக்க தருணம் நல்கியபிறகு அரசு தகுந்ததெனக் கருதும் அவ்வித ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(2). முன்சொன்னவாறான அறிவிப்பு கெசட்டில் வெளியிடப்பட்டுள்ள போது அறிவிப்பு வெளியிடப்பட்ட அந்த நாளன்றும் அந்த நாளின் ஆரம்பத்திலிருந்தும் உடைமையாக்கப்பட்ட சொத்து முழுவதும் எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதுடன் அந்தச் சொத்தின் உடைமைக்காலம் முடிவடையவேண்டும்.

(3) பின்வரும் சந்தர்ப்பங்களைத்தவிர இத்தப்பிரிவின் கீழ் எவ்வித சொத்தும் உரிமைப்படுத்தப்படக்கூடாது, அவையாவன:—

(எ) உடைமைப்படுத்தும் காலத்தில் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அரசின் செலவில் சொத்திலோ, அதனுள்ளோ அதன் மீதோ ஏதேனும் கட்டுமான வேலை நடத்தப்பட்டிருந்தால் மற்றும் அவ்வேலைகளின் மதிப்பு அல்லது அனுபோக உரிமை அரசின் நோக்கங்களுக்காக பத்திரப்படுத்தப்படவோ அல்லது பாதுகாக்கப்படவோ வேண்டும் என அரசு தீர்மானிக்கவேண்டும், அல்லது

(பி) அரசின் நிர்ணயப்படி உரிமை கைப்பற்றப்படும்போது இருந்த அதே நிலையில் சொத்தினை பாதுகாப்பதற்கான செலவு மிகையாக இருத்தல் மற்றும் அவ்வாறு பாதுகாப்பதற்கான நஷ்டஈடு கொடுக்கப்படாமல் அச்சொத்து உடமை கைப்பற்றப்படுவதிலிருந்து விடுவிக்கப்பட்டதாக ஒப்புக்கொள்ள அதன் உடமையாளர் மறுத்தல்.

(4) துணைப்பிரிவு 3-ன் கீழ் அரசின் ஏதாவது முடிவு அல்லது தீர்மானம் இறுதியானதாக இருக்கும் என்பதுடன் எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்படக் கூடாது.

